# மேட்டுப்பாளையம் நகராட்சி

## <u>கூட்டப் பொருள்</u>

| | |
|---|---|
| 1 | 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் நாள் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற உறுப்பினர்கள் பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக்கொண்ட நிகழ்ச்சியின் நடவடிக்கைக்குறிப்பு<br>**வருகை தந்தோர்**<br>1. திருமதி. தஸ்னீமா பேகம் .எம் நகர்மன்ற உறுப்பினர்<br>2. திரு. முகமது உசேன் .ஆ ”<br>3. திருமதி. உமா மகேஸ்வரி .மா ”<br>4. திருமதி. மெஹரிபா பர்வின் .அ ”<br>5. திரு. விஜயகாண்டீபன் .சீ ”<br>6. திருமதி. ஸமினா பேகம் ”<br>7. திரு. முகமது இப்ராகிம் .மு ”<br>8. திருமதி. புவனேஸ்வரி .கி ”<br>9. திரு. முகமது யாசின் .மு ”<br>10. திரு. தனசேகரன் . ரா ”<br>11.திருமதி. ஜம்ருத் பேகம் முகமது யூனூஸ்.மு ”<br>12. திரு. கிருஷ்ணமூர்த்தி .சு ”<br>13. திருமதி. சங்கீதா .அ ”<br>14. திருமதி. காயத்திரி .ஆ ”<br>15. திரு. ஸ்ரீராம் .இரா ”<br>16. திருமதி. அனிஷா .ஷா ”<br>17. திரு. ரவிக்குமார் .க ”<br>18. திரு. சுனில்குமார் .பா ”<br>19. திரு. மீராமைதீன் .க ”<br>20. திருமதி. காளியம்மாள் .சு ”<br>21. திரு. நவீன் .ஆர்.எஸ் ”<br>22. திரு. முத்துசாமி .பெ ”<br>23. திருமதி. கவிதா .பு ”<br>24. திரு. மருதாச்சலம் .ரா ”<br>25. திருமதி. உமாராணி .க ”<br>26. திருமதி. சிவமலர் .க ”<br>27. திரு. நடராஜன் .ஒ.ரா ”<br>28. திருமதி. அனிதா .எஸ் ”<br>29. திருமதி. கலைச்செல்வி .எஸ் ”<br>30. திரு. குருபிரசாத் .சு ”<br>31. திருமதி. விஜயலட்சுமி ”<br>32. திருமதி. அருள்வடிவு .ச ”<br>33. திருமதி. சுமதி .ஆ<br>இன்று 02.03.2022ம் தேதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மேற்கண்ட 33 வார்டு நகர்மன்ற உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாண உறுதிமொழி எடுக்கப்பட்டு பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. |

# மேட்டுப்பாளையம் நகராட்சி

## <u>கூட்டப் பொருள்</u>

1

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் நாள் காலை 9.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெற்ற நகர்மன்றத் தலைவர் தேர்தல் கூட்டத்தின் கூட்ட நடவடிக்கைகள்

**வருகை தந்தோர்**

| | |
|---|---|
| 1. திருமதி. தஸ்னீமா பேகம் .எம் | நகர்மன்ற உறுப்பினர் |
| 2. திரு. முகமது உசேன் .ஆ | ” |
| 3. திருமதி. உமா மகேஸ்வரி .மா | ” |
| 4. திருமதி. மெஹரிபா பர்வின் .அ | ” |
| 5. திரு. விஜயகாண்டீபன் .சீ | ” |
| 6. திருமதி. ஸமினா பேகம் | ” |
| 7. திரு. முகமது இப்ராகிம் .மு | ” |
| 8. திருமதி. புவனேஸ்வரி .கி | ” |
| 9. திரு. முகமது யாசின் .மு | ” |
| 10. திரு. தனசேகரன் . ரா | ” |
| 11. திருமதி. ஜம்ருத் பேகம் முகமது யூனூஸ் .மு | ” |
| 12. திரு. கிருஷ்ணமூர்த்தி .சு | ” |
| 13. திருமதி. சங்கீதா .அ | ” |
| 14. திருமதி. காயத்திரி .ஆ | ” |
| 15. திரு. ஸ்ரீராம் .இரா | ” |
| 16. திருமதி. அனிஷா .ஷா | ” |
| 17. திரு. ரவிக்குமார் .க | ” |
| 18. திரு. சுனில்குமார் .பா | ” |
| 19. திரு. மீராமைதீன் .க | ” |
| 20. திருமதி. காளியம்மாள் .சு | ” |
| 21. திரு. நவீன் .ஆர்.எஸ் | ” |
| 22. திரு. முத்துசாமி .பெ | ” |
| 23. திருமதி. கவிதா .பு | ” |
| 24. திரு. மருதாச்சலம் .ரா | ” |
| 25. திருமதி. உமாராணி .க | ” |
| 26. திருமதி. சிவமலர் .க | ” |
| 27. திரு. நடராஜன் .ஒ.ரா | ” |
| 28. திருமதி. அனிதா .எஸ் | ” |
| 29. திருமதி. கலைச்செல்வி .எஸ் | ” |
| 30. திரு. குருபிரசாத் .சு | ” |
| 31. திருமதி. விஜயலட்சுமி | ” |
| 32. திருமதி. அருள்வடிவு .ச | ” |
| 33. திருமதி. சுமதி .ஆ | |

நகர்மன்றத் தலைவர் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டத்தில் தேர்தல் நடைபெற்றது.

தீர்மானம் :

நகர் மன்ற உறுப்பினர்களிலிருந்து நகர்மன்றத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் திரு. இரா. வினோத் பி.எஸ்.சி அவர்களால் நடத்தப்பட்டது.

நகர்மன்றத் தலைவர் தேர்தலுக்கு இரண்டு வேட்பு மனுக்கள் பெறப்பட்டன.

(1) திருமதி. எஸ்.கலைச்செல்வி (வார்டு எண்.29) நகர்மன்ற உறுப்பினர் அவர்களை திரு.ரா.தனசேகரன் (வார்டு எண்.10) நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிய திரு. சு.குருபிரசாத் (வார்டு எண்.30) நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் வழிமொழியப்பட்டது.

(2) . திருமதி. மெஹரிபா பர்வின் .அ (வார்டு எண்.4) நகர்மன்ற உறுப்பினர் அவர்களை திரு.சீ.விஜயகாண்டீபன் (வார்டு எண்.5) நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிய திரு.ஒ.ரா.நடராஜன் (வார்டு எண்.27) நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் வழிமொழியப்பட்டது.

| | |
|---|---|
| | இரண்டு வேட்புமனுக்களும் சரியாக இருந்ததால் அவை ஏற்கப்பட்டன. வாக்குச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டன. வாக்குப்பெட்டி தயாரிக்கப்பட்டு பெட்டி காலியாக இருந்ததை அனைவருக்கும் காண்பிக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது. வாக்குச்சீட்டுகள் கலக்கப்பட்டு (Shuffle) ஒவ்வொரு உறுப்பினருக்கும் வார்டு வரிசையாக வழங்கப்பட்டு வாக்குப்பதிவு நடைபெற்றது.<br>• மொத்தம் பதிவான வாக்குகள் : 33<br>• செல்லாத வாக்குகள் : 1<br>• பதிவான செல்லத்தக்க வாக்குகள் : 32<br>• திருமதி. எஸ்.கலைச்செல்வி : 8<br>• திருமதி. அ. மெஹரிபா பர்வின் : 24<br>அதிக வாக்குகள் பெற்ற திருமதி. அ. மெஹரிபா பர்வின் அவர்கள் நகர்மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. |

# மேட்டுப்பாளையம் நகராட்சி

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1 | 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் நாள் புதன்கிழமை மதியம் 2.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெற்ற நகர்மன்றத் துணைத் தலைவர் தேர்தல் கூட்டத்தின் கூட்ட நடவடிக்கைகள்<br>**வருகை தந்தோர்**<br>1. திருமதி. மெஹரிபா பர்வின் .அ நகர்மன்றத் தலைவர்<br>2. திருமதி. தஸ்னீமா பேகம் .எம் நகர்மன்ற உறுப்பினர்<br>3. திரு. முகமது உசேன் .ஆ „<br>4. திருமதி. உமா மகேஸ்வரி .மா „<br>5. திரு. விஜயகாண்டீபன் .சீ „<br>6. திருமதி. ஸமினா பேகம் „<br>7. திரு. முகமது இப்ராகிம் .மு „<br>8. திருமதி. புவனேஸ்வரி .கி „<br>9. திரு. முகமது யாசின் .மு „<br>10. திரு. தனசேகரன் . ரா „<br>11. திருமதி. ஜம்ருத் பேகம் முகமது யூனூஸ் .மு „<br>12. திரு. கிருஷ்ணமூர்த்தி .சு „<br>13. திருமதி. சங்கீதா .அ „<br>14. திருமதி. காயத்திரி .ஆ „<br>15. திரு. ஸ்ரீராம் .இரா „<br>16. திருமதி. அனிஷா .ஷா „<br>17. திரு. ரவிக்குமார் .க „<br>18. திரு. சுனில்குமார் .பா „<br>19. திரு. மீராமைதீன் .க „<br>20. திருமதி. காளியம்மாள் .சு „<br>21. திரு. நவீன் .ஆர்.எஸ் „<br>22. திரு. முத்துசாமி .பெ „<br>23. திருமதி. கவிதா .பு „<br>24. திரு. மருதாச்சலம் .ரா „<br>25. திருமதி. உமாராணி .க „<br>26. திருமதி. சிவமலர் .க „<br>27. திரு. நடராஜன் .ஒ.ரா „<br>28. திருமதி. அனிதா .எஸ் „<br>29. திருமதி. கலைச்செல்வி .எஸ் „<br>30. திரு. குருபிரசாத் .சு „<br>31. திருமதி. விஜயலட்சுமி „<br>32. திருமதி. அருள்வடிவு .ச „<br>33. திருமதி. சுமதி .ஆ<br><br>நகர்மன்றத் துணைத் தலைவர் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டத்தில் தேர்தல் நடைபெற்றது.<br><br>**தீர்மானம் :**<br>நகர் மன்ற உறுப்பினர்களிலிருந்து நகர்மன்றத் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர் திரு. இரா. வினோத் பி.எஸ்.சி அவ்ாகளால் நடத்தப்பட்டது.<br>நகர்மன்றத் துணைத் தலைவர் தேர்தலுக்கு இரண்டு வேட்பு மனுக்கள் பெறப்பட்டன.<br>(1). திருமதி. ச. அருள்வடிவு (வார்டு எண்.32) நகர்மன்ற உறுப்பினர் அவர்களை திரு.சு.கிருஷ்ணமூர்த்தி (வார்டு எண்.12) நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிய திரு.ஒ.ரா.நடராஜன் (வார்டு எண்.27) நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் வழிமொழியப்பட்டது. |

| | |
|---|---|
| | (2) திருமதி. விஜயலட்சுமி (வார்டு எண்.31) நகர்மன்ற உறுப்பினர் அவர்களை திருமதி.எஸ்.கலைச்செல்வி (வார்டு எண்.29) நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிய திரு. சு.குருபிரசாத் (வார்டு எண்.30) நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் வழிமொழியப்பட்டது.<br>இரண்டு வேட்புமனுக்களும் சரியாக இருந்ததால் அவை ஏற்கப்பட்டன. வாக்குப்பெட்டி தயாரிக்கப்பட்டு. பெட்டி காலியாக இருந்ததை அனைவருக்கும் காண்பிக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது. வாக்குச்சீட்டுகள் கலக்கப்பட்டு (Shuffle) ஒவ்வொரு உறுப்பினருக்கும் வார்டு வரிசையாக வழங்கப்பட்டு வாக்குப்பதிவு நடைபெற்றது.<br>• மொத்தம் பதிவான வாக்குகள் : 33<br>• செல்லாத வாக்குகள் : இல்லை<br>• பதிவான செல்லத்தக்க வாக்குகள் : 33<br>• திருமதி. ச.அருள்வடிவு : 24<br>• திருமதி. விஜயலட்சுமி : 9<br>அதிக வாக்குகள் பெற்ற திருமதி. ச.அருள்வடிவு அவர்கள் நகர்மன்றத் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. |

# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 28.03.2022 ம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கூட்டப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி.

| | |
|---|---|
| 1. | முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்கள் திரு.இராமசாமி, திரு.குமார், திரு.முருகேசன், திரு.கோபால்,திருமதி.அவ்வாமா உசேன் மற்றும் திரு.ம.ராஜன் வருவாய் ஆய்வாளர்(சிறப்பு) ஆகியோர் காலமானதற்கு இரங்கலைத் தெரிவித்து திருமதி. ஜம்ரூத் பேகம் முகமது யூனூஸ் அவர்கள் (நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.11) கொண்டு வந்த இரங்கல் தீர்மானம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**தீர்மானம் எண்** : –<br>**தீர்மானம்** : இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுதத்தில இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது |
| 2. | மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர். திரு. இரா.வினோத் அவர்களின் மார்ச் 2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்** : 265<br>**தீர்மானம்** : பதிவு செய்யப்பட்டது |
| 3. | மேட்டுப்பாளையம் நகராட்சி பொறியாளர். திருமதி.சி.கவிதா அவர்களின் மார்ச் 2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்** : 266<br>**தீர்மானம்** : பதிவு செய்யப்பட்டது |

4 மேட்டுப்பாளையம் நகராட்சி சாமண்ணா தலைமை நீரேற்று நிலையம் சத்தியமூர்த்தி நகரில் பவானி ஆற்றில் இருந்து மூன்று திட்டங்கள் மூலம் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு நகரில் மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் மழைக் காலங்களில் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தலைமை நீரேற்று நிலையத்தில் சேறுகள், சகதிகள் படிந்து விடுவதால் குடிநீர் விநியோகம் தடைபடுகிறது மற்றும் பில்லூர் டேமிலிருந்து நீர் திறக்கப்பட்டவுடன் சமயபுரம் பேரேஜ் (Barrage) மின் உற்பத்தி எடுக்கும் பொருட்டு தண்ணீர் தேக்கம் செய்து வருவதாலும், கோடைக் காலங்களில் ஆற்றில் வழியோர கிராமங்கள் மற்றும் விவசாயிகளுக்கு தேவைக்கு நீர் எடுப்பதாலும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது.

மேற்படி காரணங்களால் மேட்டுப்பாளையம் நகராட்சி பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்க இயலாததால் நகர்மன்றத் தலைவர் அவர்கள் பரிந்துரையின் பேரில் மேட்டுப்பாளையத்திலிருந்து சுமார் 10கி.மீ. தொலைவில் விளாமரத்தூர் என்ற கிராமத்தில் இருந்து தூய்மையான குடிநீர் எடுக்கவும், குடிநீரை குழாய்கள் மூலம் சத்தியமூர்த்தி நகர் கொண்டு வந்து சேர்க்கவும், தலைமை நீரேற்று நிலையத்தில் சுத்திகரிப்பு செய்து நகரில் மேல்நிலைத் தொட்டிகளுக்கு நிரப்பப்பட்டு நல்ல நிலையில் குடிநீர் வழங்கவும், மேற்படி குடிநீர் திட்டத்தை செயல்படுத்த அரசுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **அலுவலகக் குறிப்பு** | : | மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண். 2279/ 2021/இ1) |
| **தீர்மானம் எண்** | : | **267** |
| **தீர்மானம்** | : | 1. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.<br>2. திருமதி.அ.மெஹரிபா பர்வின், நகர் மன்றத் தலைவர், திருமதி.ச.அருள்வடிவு , நகர்மன்றத் துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் திருமதி. ஜம்ருத்பேகம் முகமது யூனூஸ், திரு.ஓ.ரா.நடராஜன், திருமதி.ஆ.சுமதி, திரு. ஆ.முகமது உசேன், திரு.சீ.விஜயகாண்டீபன், திருமதி.கி.புவனேஸ்வரி, திருமதி.அ.ஸமீனா பேகம், திரு.க.ரவிக்குமார், திருமதி. க. உமாராணி, திருமதி.சு.காளியம்மாள்ஆகியோர் விளாமரத்தூர் கிராமத்திலிருந்து குடிநீர் எடுத்து நகராட்சிப்பகுதி பொதுமக்களுக்க விநியோகம் செய்யும் இத்திட்டத்தை உடனடியான செயல்படுத்த அரசுக்கு பரிந்துரை செய்யக் கேட்டுக் கொண்டனர். |

| | |
|---|---|
| 5 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN40 P 3711 க்கு தகுதிச் சான்று பெரும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 3,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண்** : 268<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN 40 M 9694 ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண்** : 269<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN 40 F 2851 ற்கு புதியதாக பேட்டரி–1 எண்ணிக்கை மற்றும் டயர்கள்– 2 எண்ணிக்கை வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண்** : 270<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 8 | இந்நகராட்சியில் தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் IEC Activities M/s Southern Solid waste management என்ற நிறுவனத்தின் பரப்புரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கொண்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 38984/2014/SBM நாள் 31.01.2022ல் தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் IEC Activities மேற்கொண்டு வரும் பரப்புரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு ஒப்பந்த காலம் முடிவடைவதால் புதியதாக ஒப்பந்தம் செய்யப்படும் வரை தற்போது பணிமேற்கொண்டு வரும் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>மேலும், மேற்கண்ட பரப்புரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு ஊதியம் வழங்கும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிருந்து மேற்கொள்ளவும் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் நகராட்சி பொது நிதிக்கு ஈடு செய்துகொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண்** : 271<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31ல் அமைந்துள்ள BSNL நிறுவன கட்டிடத்திற்கு சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P 1669/2011ற்கு 27.06.2019ல் தீர்ப்புரை வரப்பெற்றது. தீர்ப்புரையின் மீது சட்டக்கருத்துரை வேண்டி திரு. B.ஆனந்த் B.A,B.L., சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களிடம் சட்டக் கருத்துரை கோரப்பட்டது. சட்டக்கருத்துரை வழங்கியதற்கு ரூ.5,000/– வழங்க வழக்கறிஞர் கோரியுள்ளார்.<br>எனவே, திரு. B.ஆனந்த் வழக்கறிஞர் அவர்களுக்கு ரூ.5000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம் . ந.க.எண்.3649/2009/அ2<br>**தீர்மானம் எண்** : 272<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 10 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மூன்று குடிநீர்த்திட்டங்களிலும் ஆற்று நீரை நேரிடையாக நீரேற்றம் செய்யப்பட்டு வடிதளங்கள் மூலமாக சுத்தம் செய்யப்பட்டு சுத்த நீராக மாற்றி நகரில் மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் பெய்த மழையால் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நீரேற்றம் செய்யும் வாய்க்கால் மற்றும் கிணறுகளில் சேறு மற்றும் சகதிகள் நிரம்பியுள்ளதால் நீரேற்றம் செய்வது தடைபடுகிறது. ஆகையால் கீழ்க்கண்ட இடங்களில் சேறுகள் அகற்ற அவசியமாகிறது.<br>1. பழைய குடிநீர்த்திட்ட திறந்த வெளி கிணறு (Open Well)<br>2. பழைய குடிநீர்த்திட்டம் சேமிப்பு தொட்டி (Settling Tank)<br>3. கூட்டு குடிநீர்த்திட்ட சேமிப்பு கிணறு<br>4. கூட்டு குடிநீர்த்திட்ட சுத்தம் செய்யும் தொட்டி (Clarifier)<br>5. புதிய குடிநீர்த்திட்ட திறந்த வெளி கால்வாய் (Open well Channel)<br>6. புதிய குடிநீர்த்திட்ட சுத்தம் செய்யும் தொட்டி (Clarifloculator)<br>மேற்கண்ட இடங்களில் சேறுகள் அகற்ற ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு தமிழ்நாடு வடிகால் வாரிய விலைப்பட்டியல் (TWAD Board Schedule of rate 20-2021) படி பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1187/2022/இ1<br>**தீர்மானம் எண்** : 273<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பபட்ட முப்பத்தி மூன்று வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள நீர்முழ்கி மோட்டார்கள் அதிக மின்னோட்டம் காரணமாக காயில் பழுதானதை சரிசெய்யவும் மேலும் சர்வீஸ் வயர், மெயின் சுவிட்சுகள், கெப்பாசிட்டர் ஆகியவை பழுதானதை சரிசெய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1188/2022/இ1<br>**தீர்மானம் எண்** : 274<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீர் நகரில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நகரில் ஆங்காங்கே அவ்வப்போது ஏற்படும் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய்கள் உடைப்பு சரிசெய்யவும் , பொதுக்குழாய் உடைப்பு சரிசெய்யவும், பொதுக் கழிப்பிடங்களுக்குத் தேவையான உதிரிச்சாமான்கள் விநியோகம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.1189/2022/இ1<br>**தீர்மானம் எண்** : 275<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.3ல் உள்ள நகராட்சி வள்ளுவர் துவக்கப்பள்ளியில் போதிய கழிவறை வசதி இல்லாத காரணத்தால் மாணவர்கள் மிகுந்த சிரமமடைகிறார்கள் இதனால், இப்பள்ளியில் கூடுதல் கழிப்பறைகள் அமைக்க ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.1346/2021/இ1<br>**தீர்மானம் எண்** : 276<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.16ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நேதாஜி துவக்கப்பள்ளி உள்ளது. இதில் போதிய கழிவறை வசதி இல்லாத காரணத்தால் மாணவர்கள் மிகவும் சிரமமடைகிறார்கள் இதனால் இப்பள்ளியில் கூடுதல் கழிப்பறைகள் அமைக்க ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.1346/2021/இ1<br>**தீர்மானம் எண்** : 277<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.29ல் உள்ள மணிநகர் துவக்கப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இவ்விரு பள்ளிகளுக்கும் போதிய கழிப்பறை இல்லாத காரணத்தால் மாணவ மாணவியர் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். மேலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் புதிய கழிப்பறை கட்ட வேண்டியுள்ளது. இவ்விரு பள்ளிகளுக்கும் கூடுதல் கழிப்பறைகள் அமைக்க ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்வி நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1346/2021/இ1<br>**தீர்மானம் எண்** : 278<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 16 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.33ல் நடூர் நகராட்சி துவக்கப்பள்ளி உள்ளது. இங்குள்ள சுற்றுச்சுவர் மிகவும் பழமையாக உள்ளதால் இடிந்து விழும் அபாயம் உள்ளது. இதனால் இப்பகுதியில் பழைய சிதிலமடைந்த சுற்றுச்சுவரினை அப்புறப்படுத்தி புதிய சுற்றுச்சுவர் அமைக்க ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்விநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1346/2021/இ1<br>**தீர்மானம் எண்** : 279<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 17 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.3ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வள்ளுவர் துவக்கப்பள்ளியில் கூடுதலாக ஒரு வகுப்பறை வேண்டி பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்கள் கடிதம் வாயிலாக கோரியுள்ளார். இதன் அடிப்படையில் கூடுதலாக ஒரு வகுப்பறை அமைக்க ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1346/2021/இ1<br>**தீர்மானம் எண்** : 280<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 18 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.4ல் உள்ள மதினாநகர் பகுதியில் நேருஜி துவக்கப்பள்ளி உள்ளது. இப்பள்ளியில் இயங்கி வரும் அங்கன்வாடி மையம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் இப்பழைய கட்டிடத்தினை அகற்றிவிட்டு புதியதாக ஒரு அங்கன்வாடி கட்டிடத்தினை அமைக்க ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1346/2021/இ1<br><br>**தீர்மானம் எண்** : 281<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 19 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN40 F 2273 க்கு தகுதிச் சான்று பெரும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 2,75,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.<br><br>**தீர்மானம் எண்** : 282<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 20 | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண்.2ல் உள்ள வெள்ளிப்பாளையம் சாலையின் அருகே நகராட்சி துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு உள்ளது. இங்கு கழிவு நீர் கால்வாய் சேதமடைந்த காரணத்தால் குடியிருப்பு அருகே கழிவு நீர் தேங்கி சுகாதார கேடு விளைவிக்கும் அபாயம் உள்ளது. மேலும் இங்கு சேதமடைந்துள்ள கழிவுநீர் கால்வாயினை சரி செய்யவும் மற்றும் கட்டிடத்திற்கு சில மராமத்துப் பணிகள் செய்யவும் ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1345/2021/இ1<br><br>**தீர்மானம் எண்** : 283<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 21 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமானஅண்ணா வணிக வளாகம் கடை எண்.8ற்கு 21.01.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் அதிகபட்ச உச்ச கேள்வி தொகையாக ரூ.16500/– கோரிய திரு.பைசல் ரஹமான் த/பெ. காஜாமைதீன் என்பவர் கோரிய தொகை அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதலாக இருப்பதால் மேற்படி கடையினை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு கடை நடத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : 1. ஏலக் கேள்வி தொகையானது அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதலாக இருந்ததாலும் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படா வண்ணம் வாடகை தொகை உள்ளதாலும் ஏலக் கேள்வி தொகையினை ஏற்கலாம்.<br>2. மேற்படி கடையினை நடத்திக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்** : 284<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 22 | மேட்டுப்பாளையம் நகராட்சி ஜவஹர்லால் நேரு பேருந்து நிலையத்தில் பழுதடைந்த சிலாப்கள், மேற்கூரைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகள், வர்ணம் பூசுதல், உயர்மின் விளக்குகள் சரி செய்தல், மாற்றுத் திறனாளிகளுக்கு சாய்வுதளம் அமைப்பதற்கும் மற்றும் Hand Rail பழுதடைந்துள்ளது சரி செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ. 5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணியை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1345/2021/இ1<br><br>**தீர்மானம் எண்** : 285<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |